தேர்வுநிலை பேரூராட்சி
அலுவலகம்
மணவாளக்குறிச்சி

ந.க.எண். 1010/2021/அ1 நாள் : 30.05.2022

**குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

கன்னியாகுமரி மாவட்டம், மணவாளக்குறிச்சி தேர்வுநிலை பேரூராட்சியில் 2021–2022–ம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்ட நிதியின் கீழ், கீழ்க்கண்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பணி செய்து முடிப்பதற்கு தகுதி வாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மணவாளக்குறிச்சி தேர்வுநிலை பேரூராட்சியின் சார்பாக அதன் செயல் அலுவலர் அல்லது அவரது அங்கீகாரம்பெற்றவரால் 17.06.2022–ம் தேதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணி வரை பேரூராட்சி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப்புள்ளிகளை மூடி முத்திரையிட்ட உறையின் மீது எந்த வேலைக்குரிய ஒப்பந்தப்புள்ளி என்றும், டெண்டர் தேதி மற்றும் நேர விபரங்களுடன் தெளிவாக எழுதி சமர்ப்பிக்க வேண்டும். வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் 17.06.2022–ம் தேதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு பேரூராட்சியில் செயல் அலுவலர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவரால் திறந்து பரிசீலனை செய்யப்படும். வேலைகளுக்கான ஒப்பந்தப்புள்ளி படிவங்களை 16.06.2022–ம் தேதி வியாழக்கிழமை பிற்பகல் 5.00 மணி வரை பட்டியலில் கண்டுள்ள தொகையை இப்பேரூராட்சி அலுவலகத்தில் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். மேலும், ஒப்பந்தப்புள்ளிபடிவங்கள் பெற்றுக் கொள்ளும் போது எந்த வேலைக்காக பெறப்படுகிறதோ அந்த வேலைக்கான தொகை ரொக்கமாக செலுத்தப்பட வேண்டும். மேற்காணும் ஒப்பந்தப்புள்ளி படிவத் தொகை திரும்ப வழங்கப்பட மாட்டாது அல்லது http://tenders.tn.gov.in என்ற இணையதள முகவரியில் இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

ஒப்பந்த ஆவணங்கள், ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள், ஒவ்வொரு வேலைக்கும் செலுத்த வேண்டிய டேவணித் தொகை ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்ளப்பட்டால் செலுத்தப்பட வேண்டிய காப்புத் தொகை, மற்றும் இதர விபரங்கள் இவ்வலுவலகத்தில் வேலை நாட்களில் வேலை நேரத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

| வ. எண் | திட்டம் மற்றும் வேலையின் பெயர் | ஒப்பந்த மதிப்பீடு (இலட்சத்தில்) | டேவணித் தொகை ரூ. | ஒப்பந்த நமுனா ரூ. | வேலை முடிக்க வேண்டிய காலம் | ஒப்பந்தக் காரரின் தகுதி |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1 | மணவாளக்குறிச்சி தேர்வுநிலை பேரூராட்சிக்குட்பட்ட சின்னவிளை அங்கன்வாடி கட்டிடத்தை இடித்து புதியதாக கட்டுதல். | 11.00 | 11000 | 6720 | 6 மாதம் | பதிவுபெற்ற ஒப்பந்தகாரர்கள் |

**ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள்**

1) ஒப்பந்தக்காரர்கள் இப்பேரூராட்சியின் பதிவுபெற்ற ஒப்பந்தக்காரர்களாக இருக்க வேண்டும். மற்றும் ஒப்பந்தத்தில் கலந்து கொள்ள தகுதியுடைய இதர துறைகளில்

ஒப்பந்ததாரராக இருந்து அவர்கள் ஒப்பந்தப்புள்ளி கொடுத்தால் ஒப்பந்ததாரராக உடன் பேரூராட்சியில் பதிவு செய்ய உரிய ஆவணங்களைக் கொடுத்து பதிவு செய்ய வேண்டும்.

2) ஒவ்வொரு வேலைக்கும் நிர்ணயிக்கப்பட்ட வைப்புத் தொகை பேரூராட்சி அலுவலகத்தில் செலுத்தி ரசீது அல்லது வங்கி வரைவோலை இணைக்க வேண்டும். இவைகள் இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளிகளும், குறிப்பிட்ட நேரத்திற்குப் பிறகு கொடுக்கப்படும் ஒப்பந்தப்புள்ளிகளும், எக்காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
3) வங்கி வரைவோலையானது, செயல் அலுவலர், மணவாளக்குறிச்சி தேர்வுநிலை பேரூராட்சி என்ற பெயரில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, மணவாளக்குறிச்சி என்ற முகவரியில் மாற்றத்தக்க வகையில் எடுக்கப்பட வேண்டும்.
4) மூடி முத்திரையிடப்பட்ட உறைகளில் ஒப்பந்தக்காரரின் முழு அஞ்சல் முகவரி தெளிவாக எழுதப்பட்டு இருக்க வேண்டும். ஒவ்வொரு உறையின் (கவரின்) மீதும் எந்த வேலைக்கு என்பதை தெளிவாக எழுதி செயல் அலுவலர், மணவாளக்குறிச்சி தேர்வுநிலை பேரூராட்சி, கன்னியாகுமரி மாவட்டம் என பெறுநர் முகவரியும், அனுப்புநர் முகவரியும் தெளிவாக எழுதப்பட வேண்டும்.
5) வேலையை முடித்த பின்னர் பட்டியல் விதிமுறைகளுக்கு உட்பட்டு திட்டத்திற்கான நிதி வரவு வந்த உடனே பட்டியல் தொகை வழங்கப்படும்.
6) ஒப்பந்ததாருக்கு ஒப்படைக்கும் பணி குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் முடிக்கப்பட வேண்டும். வேலை ஆணை கிடைக்கப்பெற்ற ஒரு வார காலத்திற்குள் வேலை துவங்கப்பட வேண்டும். ஒப்பந்த காலத்திற்குள் பணி முடிக்கப்படவில்லையெனில் தாமதம் ஆகும் ஒவ்வொரு நாளுக்கும் ரூ.100/– வீதம் அபராதம் விதிக்கப்படும்.
7) குறிப்பிட்ட காலத்திற்குள்ளும், அபராதம் விதிக்கப்பட்ட காலத்திற்குள்ளும் பணி முடிக்க இயலாத ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தம் ரத்து செய்யப்படுவதுடன் குறைந்தபட்சம் ஆறு மாதங்களுக்கு எவ்வித ஒப்பந்தத்திலும் ஒப்பந்தக்காரர் கலந்துகொள்ள அனுமதிக்கப்பட மாட்டார்.
8) வேலைகள் நடைபெறுவதை பல்வேறு நிலைகளில் புகைப்படம் எடுத்து, இறுதி பட்டியலுடன் இணைக்கப்பட்டிருக்க வேண்டும், தவறினால் தொகை வழங்கப்பட மாட்டாது.
9) ஒப்பந்தப்புள்ளி கோரும் நாள் அரசுவிடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டால் அடுத்த வேலைநாளில் அதே நேரத்தில் ஒப்பந்தம் பெறப்படும்.

செயல் அலுவலர்,
மணவாளக்குறிச்சி தேர்வு நிலை பேரூராட்சி

**பெறுநர்:** பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்கள்,
மணவாளக்குறிச்சி தேர்வு நிலை பேரூராட்சி.

**நகல்:–**

1) தலைவர் மணவாளக்குறிச்சி பேரூராட்சி
2) உதவி இயக்குநர், பேரூராட்சிகள், நாகர்கோவில் மண்டலம் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகின்றது.
3) உதவி செயற்பொறியாளர், பேரூராட்சிகள் நாகர்கோவில் மண்டலம். கன்னியாகுமரி தொகுப்பு அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.
4) இளநிலை பொறியாளர், மணவாளக்குறிச்சி பேரூராட்சி (தொகுப்பு)
5) செயல் அலுவலர்கள், மண்டைக்காடு பேரூராட்சி, வெள்ளிமலை பேரூராட்சி, கல்லுக்கூட்டம் பேரூராட்சி மற்றும் கணபதிபுரம் பேரூராட்சி
6) சம்பந்தப்பட்ட கோப்புகள்.
7) பேரூராட்சி அலுவலக விளம்பர பலகை.
8) பணி மேற்பார்வையார், மணவாளக்குறிச்சி (தொகுப்பு)